அசல்

9.10.19 தி.த. கனகசுந்தரம்

அசல்-1

1/30 ஆயலூர் முத்தையா முதலித்தெரு
சென்னை - அக்டோபர் 9, 1899

ஐய,

தாங்கள் இரண்டாம் தேதி எழுதிய கார்ட்டும் குறுந்தொகைப் பிரதியும் கிடைத்தன. குறுந்தொகைப் பிரதிக்காக மிகவும் வந்தனம் சொல்லுகின்றேன். அதனைக் கூடிய சீக்கிரத்தில் அனுப்பிவைக்கின்றேன். தங்களிடத்திலாவது தங்கள் நண்பர்களிடத்திலாவது வேறு குறுந்தொகைப் பிரதி உளவோ! உளவாயின் அதனை தெரிவித்தால் மிகவுபகாரமாயிருக்கும். அவைகளையே இப்பச் சொல்லி நான் கேட்கவில்லை. இருப்பது தெரிந்தால் எனது பரிசோதனையில் நிகழும் ஐயங்களை யகற்றுதற்கு

அசல்

9.10.19 தி.த. கனகசுந்தரம்

அசல் -1

அவைகளை நேரில் போய்ப் பார்த்துக்
கொள்ளலாமென்பது என்னெண்ணம்.
நாங்கள் சென்னைக்கு வந்திருந்தது
தெரிந்திருந்தால் யான் பார்த்திருப்பேன்
பாக்கியமற்றுப் போய் விட்டேனே
என்பது துக்கமாயிருக்கின்றது.
பிரதிகளிடம் ஜாக்கிரதையாய்
வந்து சேரும்படி யனுப்பி
வைப்பேன் —

இங்ஙனம்
தங்கள் அன்பன்
தி. த. கனகசுந்தரம்

தொல்காப்பியம் பொருளதிகாரத்திற்கு
யார் யார் உரை செய்திருக்கிறார்கள்? நச்சினார்
க்கினியாருரை யன்றி மற்றையுரைகளை நாங்கள்
கண்டிருக்கின்றிலோம்! பேராசிரியருரை
யும் பெறத்தகப்படுமோ? தாங்கள் தெரிந்தெடுத்
துப் பார்த்த விடங்கள் [illegible] காண
க்கூடுமோ? இதை அறிய விரும்புகிறேன்.
தி.த.க.